நீதி அமைச்சு சுற்றறிக்கை - 06/2022

எனது இல. : MOJ/E9/டி.பி.நி.கி./2022

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு,

கொழும்பு 10.

2022.08.25

சகல மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும்,
சகல மாவட்ட நீதிபதிகளுக்கும்,
சகல நீதவான்களுக்கும்,
சகல தொழில் நியாய சபைகளின் தவிசாளர்களுக்கும்,
பதிவாளர் உயர் நீதிமன்றம்,
பதிவாளர் மேன்முறையீட்டு நீதிமன்றம்.

## வழக்கு விசாரணைகளின் வழக்கு அறிக்கைகள் மற்றும் கற்புல / செவிப்புல ஒலி, ஒளிப்பதிவுகளின் டிஜிரல் பிரதிகளை விநியோகித்தல்.

நவீன தொழில்நுட்பம் நீதித்துறைக்கு அறிமுகம் செய்யப்பட்டதன் மூலம் சட்ட பணிகளுக்கான செலவினம் மற்றும் காலத்தை குறைத்தல் மற்றும் செயன்முறையை இலகுபடுத்துவதன் மூலம் பொது மக்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் துரிதமான சேவையை ஆற்றுவதை நோக்காகக் கொண்டு வழக்கு அறிக்கைகளின் டிஜிரல் பிரதிகள் மற்றும் வழக்கு விசாரணைகளின் கற்புல / செவிப்புல ஒலி, ஒளிப்பதிவுகளின் டிஜிரல் பிரதிகளை விநியோகிப்பதற்காக பின்வருமாறு கட்டணம் அறவிடுவதற்கு அவி/22/0338/330/019 ஆம் இலக்க 2022.03.14 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

02. அதற்கமைய வழக்கு அறிக்கைகளின் டிஜிரல் பிரதிகள் மற்றும் வழக்கு விசாரணைகளின் கற்புல / செவிப்புல ஒலி, ஒளிப்பதிவுகளின் டிஜிரல் பிரதிகளை விநியோகிக்கும் போது அறவிட்டுக் கொள்ள வெண்டிய கட்டணங்கள் பின்வருமாறாகும்.

2.1 வழக்கு அறிக்கைகளின் டிஜிரல் பிரதிகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| I. | இறுவட்டு (CD) 01 இற்கு அறவீடு | ரூ. 100/- |
| II. | ஸ்கேன் செய்தல் மற்றும் பிரதி செய்வதற்கு ஒரு பக்கத்துக்கான அறவீடு | ரூ. 3/- |

**2.2** வழக்கு அறிக்கைகளின் செவிப்புல ஒலிப்பதிவுகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| I. | USB Drive (16 GB) 01 இற்கு அறவீடு | ரூ. 1500/- |
| II. | செவிப்புல ஒலிப்பதிவு ஒவ்வொரு 30 நிமிடத்துக்குமான அறவீடு | ரூ. 500/- |

2.3 வழக்கு விசாரணைகளின் வீடியோ ஒளிப்பதிவுகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்

I. USB Drive (16 GB) 01 இற்கு அறவீடு ரூ. 1500/-
II. வீடியோ ஒளிப்பதிவு ஒவ்வொரு 30 நிமிடத்துக்குமான அறவீடு ரூ. 750/-

03. டிஜிரல் பிரதிகள் மற்றும் செவிப்புல/வீடியோ ஒளிப்பதிவுகளை விநியோகிப்பதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களிலிருந்து (இறுவட்டு மற்றும் USB Drive இற்கு அறவிடப்படுகின்ற கட்டணம் தவிர) குறித்த அலுவலா்களுக்கு செலுத்த வேண்டிய விகிதங்கள் பின்வருமாறாகும்.

3.1 வழக்கு அறிக்கைகளின் டிஜிரல் பிரதிகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்

I. ஸ்கேன் செய்தல் மற்றும் பிரதி பண்ணுவதை மேற்கொள்ளும் அலுவலருக்கு 20%
II. உள்ளடக்கத்தை பரிசோதித்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு 10%

3.2 வழக்கு விசாரணைகளின் கற்புல / செவிப்புல ஒளிப்பதிவுகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்

I. தொகுப்பு மற்றும் பிரதி பண்ணுவதை மேற்கொள்ளும் அலுவலருக்கு 25%
II. உள்ளடக்கத்தை பரிசோதித்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு 10%

04. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறவிடப்படுகின்ற கட்டணங்களிலிருந்து அரசாங்கத்துக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணத்தை அரச வருமானமொன்றாக திரட்டிய நிதியத்திற்கு செலவு வைத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த பணியுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட அலுவலா்களுக்கு மாத்திரம் மேற்படி கொடுப்பனவுகளை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், மேலுள்ள பணிக்குத் தேவையான இறுவட்டு (CD) மற்றும் USB Drive உரிய நீதிமன்றத்தினூடாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

05. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2022.08.25 ஆம் திகதி முதல் அமுலில் இருக்கும்.

கையொப்பம் /
செயலாளர்,

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.

பிரதி : 1. செயலாளர், நீதிச் சேவைகள் ஆணைக்குழு

2. பிரதம நிதி அலுவலர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு,